வைபவங்கள் மற்றும்
பாஸ்போர்ட், அடையாள அட்டை,
வெளிப்புற படப்பிடிப்புகள்
சலுகைகளுடன்
செய்துகொள்ள நாடுக
★ யூடபோட்டோ ★
51, நான்காம் குறுக்கு வீதி,
சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

தீவுப் பகுதியில்
புகழ்பெற்ற ஸ்தாபனம்
இப்பொழுது
யாழ். நகரில் இயங்குகிறது!
★ யூடபோட்டோ ★
51, நான்காம் குறுக்கு வீதி,
சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 28 புதன்கிழமை (10-02 1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 75

சங்குப்பிட்டிப் பாதை ஊடாக முதலில் உணவு பொருள்கள்

ஐ. நா. வாகன-அணியில் வரும்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 10

கேரதீவு — சங்குப்பிட்டிப் பாதை திறக்கப்பட்டாலும் முதலில் அப்பாதை வழியாக சுமார் 35 லொறிகளில் உணவுப் பொருள்கள் எடுத்துவரப்படும். அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் வாகன அணியில் உணவுப் பொருள்கள் எடுத்துவருவது வெற்றி அளித்ததும், அச்சேவை பயணிகள் போக்குவரத்துக்கு விஸ்தரிக்கப்படும்.

கொழும்பிலிருந்து நேற்றுக் கிடைத்த செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

பாதையைத் திறப்பதற்கான சூழ்நிலை உருவாகிவிருப்பதாகவும்—

தற்போது குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு முதலில் வாகன அணிமூலம் உணவுப் பொருள்களை எடுத்துவர ஐ. நா. அதிகாரிகள் விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் வழங்கப்படும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு இன்னும் இரு வார காலத்திற்குள் முதலாவது வாகன அணி வந்து சேரும் என எதிர்பார்க்கலாம் என்று சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் நம்பிக்கை வெளியிட்டார்.

முதலில் இரண்டொரு தடவை வாகன அணிகள் வரும் வேளையில் பூநகரிப்

(5ஆம் பக்கம் பார்க்க)

இறுதி முடிவெடுக்க சனியன்று ஐ.நா. அதிகாரிகள் வருவர்

யாழ்ப்பாணம், பெப். 10

கேரதீவு — சங்குப்பிட்டி பாதையை திறப்பது தொடர்பான இறுதி முடிவுகளை மேற்கொள்வதற்காக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் இரு அதிகாரிகள் எதிர்வரும் சனியன்று யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர்.

அந்த அதிகாரிகளின் பெயர், விவரங்கள் மற்றும் விடயங்கள் பற்றிய தகவல்கள் நாளை மறுதினம் யாழ்ப்பாணத்துக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் வரும் இரு அதிகாரிகளும் பாதை திறப்பது சம்பந்தமான விடயம் குறித்து விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் இங்கு பேச்சு நடத்துவர் என்றும்—

அவர்கள் கொழும்பு திரும்பியதும் அங்குள்ள தமது அதிகாரிகளுடனும், ஜெனிவா தலைமையகத்தில் உள்ள தமது அதிகாரிகளுடனும் தமது யாழ். விஜயத்தின் பெறுபேறுகள் குறித்து ஆராய்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தேவைப்பட்டால், உடனடியாக ஜெனிவா தலைமையகத்தைச் சேர்ந்த அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று யாழ்ப்பாணம் விரையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[உ-3-5]

அரசு-ஐ.நா. அதிகாரிகள் ஒப்பந்தத்தில் கைச்சாத்து?

கொழும்பு, பெப். 10

கேரதீவு — சங்குப்பிட்டிப் பாதையைத் திறப்பது தொடர்பாக இணக்கநிலை ஒன்று ஏற்பட்டிருப்பதாகவும் —

இது தொடர்பான பூர்வாங்கப் பத்திரம் ஒன்றில் ஸ்ரீலங்கா அரசின் உயரதிகாரிகளும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் அதிகாரிகளும் கடந்த ஞாயிறன்று [7 ஆம் திகதி) ஒப்பமிட இருந்ததாகவும் —

அன்றைய தினம் காலை கொழும்பிலிருந்து உதயனுக்கு அனுப்பப்பட்ட செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

படைகளை வாபஸ் செய்வது, பாதையைத் திறப்பதற்கு ஜனாதிபதி பிரேமதாஸா கொள்கையளவில் இணங்கியிருப்பதாக அவரின் மூத்த அதிகாரி ஒருவர் மூலம் ஐ. நா. தூதரக அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் அறியவருகிறது.

எனினும் பாதைப் பகுதியில் இருந்து துருப்புகளை வாபஸ் பெறுவதை இராணுவம் கௌரவப் பிரச்சினையாகக் கருதுவதாகவும் —

பூநகரிப் பகுதியைக் கைப்பற்றவும் அதனைத் தக்கவைத்துக் கொள்ளவும் சில அதிகாரிகள் உட்பட 45 படையினர் வரை தாங்கள் இழந்திருப்பதாக இராணுவம் அரசுக்குச் சுட்டிக்காட்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய சூழ்நிலையில் இராணுவ வாபஸ் குறித்து ஒரேயடியாக அறிவிக்காமல், இராணுவம் இருக்கத்தக்கதாக உணவுப் பொருள்கள் ஏற்றிவரும் வாகன அணிகளை அப்பாதையூடாக அனுப்பி வைக்கவும் —

அதுபற்றிய செய்திகளைப் பகிரங்கப்படுத்திய பின், படிப்படியாக சந்தடியின்றி இராணுவத்தை வாபஸ் பெற்ற பின்னர், பயணிகள் போக்குவரத்துச் சேவையை நடத்த வழிசெய்யலாம் என்றும் —

ஜனாதிபதியுடன் நெருங்கிய வட்டாரங்கள் கருதுவதாக ஜனாதிபதியின் முக்கிய ஆலோசகர் ஒருவர் குறிப்பிட்டார் என அறியவந்தது

பூநகரிப் பாதை திறந்தால் அது பேச்சுக்கு வழி வகுக்கும்?

கேரதீவு — சங்குப்பிட்டிப் பாதையை நல்லெண்ண அடிப்படையில் அரசு திறக்குமானால் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கக் கூடிய சூழ்நிலை உருவாகும் என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த வருட இறுதியில் யாழ்ப்பாணம் விஜயம் செய்திருந்த அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகளுடன் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் பேச்சு நடத்திய போது —

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் பூநகரிப் பாதையை அரசு நல்லெண்ண அடிப்படையில் திறக்க வேண்டும் என்று கோரியிருந்தனர்.

இதே செய்தியை ஐ. நா. அதிகாரிகள் ஸ்ரீலங்கா அரசுக்கு தெரிவித்ததாகவும் —

அதைத் தொடர்ந்து அரசின் மூத்த அதிகாரிகள் இந்த விடயத்தில் கூடுதல் அக்கறை காட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பூநகரிப் பாதை திறக்கப்படும் சூழ்நிலை உருவான பின்னர் ஐ. நா. வின் மத்தியஸ்தத்தில் [illegible] பிக்க வாய்ப்பு [illegible] சுட்டிக் காட்டப்பட்டது.

(உ-3-5)

கிளாலிப் படகு சேவை நாளை

யாழ்ப்பாணம், பெப் 10

கிளாலி – பூநகரி படகுச் சேவை நாளை வழமையான நேரத்தில் நடைபெறும் என தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையின் யாழ் மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

(உ)

ஆஸி. தூதராக சிறில் ரணதுங்க

கொழும்பு, பெப். 10

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் லெப்டினன்ட் ஜெனரல் சிறில் ரணதுங்க ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்படவிருக்கிறார்.

ஆஸ்திரேலிய அரசுக்கு இது பற்றி ஜனாதிபதி அறிவித்துள்ளார். ஆஸ்திரேலிய அரசின் பதிலை அரசு எதிர்பார்த்துள்ளது (உ-எ)

பாதுகாப்பு செயலாளராக வோல்டர்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான லெப்டினன்ட் ஜெனரல் சிறில் ரணதுங்க ஆஸ்திரேலிய தூதராக நியமிக்கப்படுவதை அடுத்து—

புதிய பாதுகாப்புச் செயலாளராக, தற்போது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சுச் செயலாளராக இருக்கும் திரு. வோல்டர் - பெர்னாண்டோ நியமிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

3 கோடி ரூபா பணம் வந்தது!

யாழ்ப்பாணம், பெப் 10

யாழ். மாவட்டத்தில் பணப் புழக்கத்தில் ஏற்பட்ட நெருக்கடியைப்போக்கும் வகையில் இலங்கை வங்கிக்கு கொழும்பில் இருந்து மூன்று கோடி ரூபா பணம் எடுத்துவரப்பட்டுள்ளது

கொழும்பில் இருந்து திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட பணம் அங்கிருந்து ''நகர'' என்ற கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு நேற்றுக் காலை எடுத்துவரப்பட்டது. காங்கேசனிலிருந்த ''குமண'' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு பணப்பொதி கொண்டுவந்து சேர்க்கப்பட்டது.

[உ-3-5]

கொழும்பு செல்லும் நோயாளருக்கு

யாழ்ப்பாணம், பெப் 10

முதற்தடவையிலும், இரண்டாவது தடவையிலுமாக 'குமண' கப்பல் மூலம் கொழும்பு செல்லத் தமது பெயர்களைப் பதிவு செய்துள்ள சகல நோயாளர்களையும் நாளை காலை தனது அலுவலகத்தில் சமூகமளிக்குமாறு யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நோயாளர்கள் தத்தமது அடையாள அட்டைகளையும், [illegible] மாறும் அவர் [illegible]

(உ-5)

நான்கு நாட்களில் 1,500 தொன் அரிசியாம்

யாழ்ப்பாணம் பெப். 10

1,500 மெற்றிக் தொன் அரிசியுடன் 'மரினால்' கப்பல் இன்னும் நான்கு தினங்களில் பருத்தித்துறை வந்து சேரும் என்று யாழ் செயலகத்திற்கு நேற்றுக் கொழும்பில் இருந்து தகவல் கிடைத்தது.

''குமாரி'' கப்பல் இங்கு வருவதற்கு முன்னதாகவே ''மரினால்'' வந்து சேர்ந்துவிடும் எனவும் அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காங்கேசனிலிருந்து வாகன அணி மூலம் உணவுப் பொருள்களை எடுத்துவரும்வரைக்கும் பருத்தித்துறைக்குத் [illegible] யாக மூன்று [illegible] அனுப்பிக்கொண்டிருக்குமாறு அரச அதிபர் நேற்று அத்தியாவசிய சேவைகள் [illegible] கோரிக்கை விடுத்தார்.

இதற்கிடையில் —

(5ஆம் பக்கம் பார்க்க)

போக்குவரத்துக் கண்காணிப்பு 3 சர்வதேச அமைப்புகளிடம்

வடபகுதிக்கான போக்குவரத்து மற்றும் உணவு விநியோகத்தைச் சீர் செய்யும் வகையில் பாதைகளின் பாதுகாப்புப் பொறுப்பை மூன்று சர்வதேச அமைப்புக்கள் பொறுப்பேற்கவிருக்கின்றன

இதற்கான ஆரம்பப் பேச்சுக்கள் கொழும்பில் அரசு அதிகாரிகளுக்கும், அந்தந்த அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

மன்னார்-பூநகரி பாதையை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவும்—

வவுனியா-மன்னார் பாதையையும் வவுனியா - தாண்டிக்குளம் பாதையையும் பிரெஞ்சு தொண்டு நிறுவனமான எம். எஸ். எவ். அமைப்பும்—

சங்குப்பிட்டி - கேரதீவு பாதையை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகமும் - பொறுப்பேற்று நடத்தவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

சங்குப்பிட்டி - கேரதீவு பாதையை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் பொறுப்பேற்ற பின்னர், ஏனைய இரு அமைப்புக்களும் அந்தந்தப் பாதைகளைப் பொறுப்பேற்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். குடாநாட்டு மக்களின் உணவு மற்றும் போக்குவரத்து நிலைமையைச் சீர்செய்ய வேண்டும் என்று சர்வதேச அமைப்புக்கள் ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுத்ததை அடுத்தே அரசு இந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது

கடலேரியில் பயணம் செய்ய விதிக்கப்பட்ட தடை நீங்கும்?

கொழும்பு. பெப். 10

யாழ் கடல்நீரேரி ஊடான போக்குவரத்துக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்குவது குறித்து அரசு சிந்தித்து வருகிறது

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸாவின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்ததாக செய்தி ஏஜென்சி ஒன்று குறிப்பிட்டது.

கடந்த ஞாயிறு இரவு கடல் நீரேரிப் பகுதியில் சென்று கொண்டிருந்த படகுகளை ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்கி மூழ்கடித்ததாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் அந்த நிறுவனம் மேலும் குறிப்பிட்டது

(உ-6)

பருத்தித்துறைக்கும் திருமலைக்கும் இடையே

பயணிகள் கப்பல் சேவைக்கு நோர்வே செஞ்சிலுவை முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 10

பருத்தித்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையே பயணிகள் கப்பல் சேவை ஒன்றை நடத்த நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தினர் முன்வந்திருப்பதாக கொழும்பில் இருந்து தகவல் கிடைத்துள்ளது.

கடந்த ஆண்டில் யாழ். வந்திருந்த நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் குடாநாட்டின் போக்குவரத்துப் பிரச்சினைகளை இங்கு நேரில் கண்டறிந்திருந்தனர். அதன் பின்னர் கொழும்பு சென்ற மேற்படி அதிகாரிகள் தமது தலைமை அலுவலக அதிகாரிகளுடன் இது குறித்துப் பேச்சு நடத்தினர் என்றும் —

குடாநாட்டுக்கான பயணிகள் கப்பல் சேவை ஒன்றை நடத்த தாம் தயாராயிருப்பதாக அதன் பின்னர் நோர்வே நாட்டு செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

இதுபற்றி நோர்வே குழுவினர் ஸ்ரீலங்கா அரச உயரதிகாரிகளுடனும் கொழும்பில் பேச்சு நடத்தியதாக அறியவருகிறது.

எனினும் —

தற்போது பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதியைத் தமது அடையாளத்தின் கீழ் வைத்திருக்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர், வேறு தொண்டர் அமைப்புகளின் ஏற்பாட்டிலான சேவைகளுக்கு பருத்தித்துறை துறைமுகம் பயன்படுத்தப்படுவதை விரும்பவில்லை என்றும் —

அத்தகைய சேவைக்கு உதவி வழங்க விரும்பும் தொண்டர் நிறுவனங்கள் அதற்குரிய நிதியை நேரடியாகத் தங்கள் அமைப்புக்கு வழங்கினால், கப்பல் சேவையைத் தாங்களே நடத்த முடியும் என்று செஞ்சிலு

(5ஆம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறை, மருதங்கேணி

இரு செயலகங்களின் முன் தொடர்ந்து மறியற் போர்!

அலுவல்கள் இரண்டாவது நாளாக ஸ்தம்பிதம்

அரசின் பொருளாதாரத் தடை மற்றும் அடக்குமுறை நடவடிக்கைகளை ஆட்சேபித்து பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேச செயலகங்களின் முன்னால் தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்று மக்கள் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்த செயலகங்களின் நாளாந்த வேலைகள் இரண்டாம் நாளாக ஸ்தம்பிதம் அடைந்தன.

கேரதீவு — சங்குப்பிட்டிப் பாதையை திறக்கும்படியும் —

அரசு விதித்துள்ள பொருளாதாரத் தடையை நீக்கும்படியும்

மக்களுக்குத் தேவையான எரிபொருள், மருந்துப் பொருள் போன்ற அத்தியாவசியப் பொருள்களைத் தட்டுப்பாடின்றி நியாய விலையில் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கும்படியும் —

கோரியே இந்த மறியற் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது

வடமராட்சி கிழக்கில் இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்துள்ள [illegible] குடும்பங்களில் 600 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணம் திடீரென நிறுத்தப்பட்டிருப்பதையும் ஆட்சேபித்து மருதங்கேணியில் மறியற்போர் நடத்தப்பட்டது.

பருத்தித்துறையில் மறியற் போர் தொடர்ந்து இன்றும் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-109-141)

போயிட்டி

புனித லூர்து அன்னை ஆலய வருடாந்தப் பெருவிழா 11-02-1993

நாளை வியாழக்கிழமை காலை 7-00 மணிக்கு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் கூட்டுத் திருப்பலியாக பங்குமக்களால் கொண்டாடப்படும்.

அனைத்து பக்தர்களும் இதில் கலந்து கொண்டு, அன்னையின் அருள்பெற அழைக்கின்றோம்.

பங்குமக்கள்,
போயிட்டி (இளவாலை)

(24359)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. பொருளியலில்- பேராசிரியர்
2. நுண்கலையில்- பேராசிரியர்
3. பொருளியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 / உதவி விரிவுரையாளர் (தகுதி காண்)
4. கல்வியியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 / உதவி விரிவுரையாளர் (தகுதி காண்)
5. வர்த்தகத்தில் / முகாமைப்படிப்புகளில் / வர்த்தக கைத் தொழிற் சட்டத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 / உதவி விரிவுரையாளர் (தகுதி காண்)

000 கல்வியியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)

00 பட்டப்படிப்புத் தரத்தில் வரலாற்றினை ஒரு பாடமாக கொண்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் அத்துடன் உயர் பட்டதாரி மட்டத்தில் கல்வித் தத்துவப்பரப்பில் கடமையாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்

சம்பள அளவுத் திட்டம் பதவிகள்

பேராசிரியர்:
ரூபா 12,000 — 6 x 300 — 4 000/- (மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1: ரூபா 9,600 — 8 x 250 — 11 600/- (மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11: ரூபா 8 000 — 5 x 250 — 9 250/ மாதமொன்றுக்கு)

உதவி விரிவுரையாளர்: ரூபா 3,900/ நிலையானது (மாதமொன்றுக்கு)

இத்துடன் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பும் வழங்கப்படும்

00 துறைத்தலைவரினாலும் பீடாதிபதியினாலும் ஓராண்டுச்சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப் படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதி காண்) ஒருவரை விரிவுரையாளர் (தகுதி கண் என்ற பதவிப் பெயரில் நியமிக்கலாம் என்பதுடன் அவரை ரூபா 4,500 — 10 x 200 — 6,500/- (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத் திட்டத்தில் வைக்க முடியும்.

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி 1993 - 04 - 30 ஆகும். ஏனைய பதவிகளுக்கு முடிவு திகதி 1993 - 03 - 19

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்பத்திரங்களை ரூபா 20/- நிதிக் கிளையில் செலுத்தி இப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தாபனக்கிளையிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். தபால் மூலம் இவ் விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர், அதற்கான வேண்டுகோளுடன் பதிவாளர் / நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்ற பெயரில் ரூபா 20/-க்கான காசுக் கட்டளை / தபாற் கட்டளையுடன் 23 x 10 ச.மீ. அளவுடையதும், சுயமுகவரியிடப்பட்டதும், ரூபா 2/- முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப் தாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்
யாழ்ப்பாணப்-
பல்கலைக்கழகம்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993 - 02 05

(சி 4506)

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கந்தப்பிள்ளை தியாகராஜா

(ஓய்வுபெற்ற தபாலதிபர், மலாகம்)

மண்ணில்: 04-11-1918 விண்ணில்: 10- 1992

எங்களை விட்டு பிரிந்து ஓராண்டாகியும் எங்கள் இதயம் விட்டகலாத அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்பு சகோதரிகள்,
திருமதி சி. தனலட்சுமி
திருமதி சி. தங்கலட்சுமி

மலாகம்.
(58'2)

உற்சவங்கள்

மயிலணி, பெப் 10

சுன்னாகம் ஸ்ரீ அரிகரபுத்திர நூதன உற்சவமூர்த்தி பிரதிஷ்டா கும்பாபிஷேகம் இன்று காலை 10 மணிக்கு பிரதிஷ்டா குரு சிவஸ்ரீ நாகேஸ்வரக் குருக்களால் நடத்தி வைக்கப்படும்

நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் அருளுரை வழங்குவர்.

* * *

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட சிவகௌரி சமேத இரத்தினேஸ்வரர் ஆலய பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

* * *

யாழ்ப்பாணம், பெப் 10

உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக பிரதிஸ்டை செய்யப்பட்ட விநாயகருக்கு இன்று புதன்கிழமை அஷ்டோத்தர சங்காபிஷேகம், விசேடபூசை என்பன நடைபெறும். இரவு 7 மணிக்கு உற்சவம் இடம்பெறும். விநாயகப் பெருமான் பூந்தண்டிகையில் வீதியுலா வருவார்.

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் ஆசியுரை வழங்குவார் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் சொற்பொழிவு ஆற்றுவார்.

(ஒ-த-89 117)

கருத்தரங்கு

யாழ்ப்பாணம் பெப் 10

''விழிப்புலனற்றோருக்கு வழிகாட்டுவோம்'' என்ற தலைப்பில் தமிழ், ஆங்கிலம், கணக்கு, பிறையிலில் கற்பித்தல் பயிற்சியைப் பெற்ற பணியாளருக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவமும், கருத்தரங்கும், செயன்முறைக் கண்காட்சியும் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள நற்சமூக நடுநிலையத்தில் நடைபெறும்.

பம்பைமடுவில் இராணுவம்

வவுனியா-மன்னார் வீதியில் உள்ள பம்பைமடுவில் இராணுவம் தற்போது நிலைகொண்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பன்னிரு திருமுறை பாராயணம்

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ் வண்ணை சிவன் கோவிலில் தமிழ் மக்களின் அல்லல் அகன்று நாட்டில் அமைதி ஏற்படும் நோக்கமாக தைப்பூச தினத்தன்று பன்னிரு திருமுறைப் பாராயணம் ஆரம்பமாகி தினமும் காலை 9 மணி முதல் 10-30 மணி வரை நடைபெற்று வருகிறது.

(க)

திருட்டு

தென்மராட்சி பெப் 10

எழுதுமட்டுவாள் சந்தியில் உள்ள இரு கடைகள் கடந்த வாரம் திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகின.

கடைகளில் இருந்த அரிசி, மா, சீனி, டால்மா மற்றும் பணம் ஆகியவை திருடுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-117)

ஆயுள்வேத மருந்து வகைகள் கப்பலில் வந்து சேரும்

யாழ்ப்பாணம், பெப் 10

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான ஆயுள்வேத மருந்து வகைகளைக் கப்பல் மூலம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

30 லட்சம் ரூபா பெறுமதியான ஆயுள்வேத மருந்து வகைகள் விரைவில் கப்பல் மூலம் யாழ். மாவட்டத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என ஆயுள்வேத கூட்டுத் தாபனத்தின் தலைவர், கொழும்பில் இருந்து யாழ் அரச அதிபருக்குத் தகவல் அனுப்பியுள்ளார்.

அரச அதிபருக்கு அறிவிப்பு

அடுத்து பருத்தித்துறைக்கு வரவுள்ள கப்பலில் மேற்படி மருந்து வகைகள் எடுத்து வரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஒ-5 3-162)

உகண்டா நாட்டில் எய்ட்ஸ் பயங்கரம்!

ஐந்தில் ஒரு பங்கினர் பாதிப்பு

கம்பாலா, பெப். 10

உகண்டா நாட்டின் சனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் எய்ட்ஸ் நோயைப் பரப்பும் எச் ஐ வி. வைரஸ் காவிகளாக உள்ளனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

ஒரு கோடி 0 லட்சம் உகண்டா மக்களில் 19 முதல் 24 சதவீதம் வரையானோர் எய்ட்ஸ் வைரஸ் காவிகளாக உள்ளனர் என்று தலைநகர் கம்பாலாவில் உள்ள அரச வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

உலகில் எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டோர் அதிகமாக வாழும் நாடாக உகண்டா இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

(ஒ எ)

தமிழ் கோடீஸ்வரரும் இளைஞரும் கைதாகினர்!

இவர்களுக்கு புலிகளுடன் தொடர்பா?

கொழும்பு பெப் 10

கொழும்பில் தமிழ் இளைஞர் ஒருவரும் கோடீஸ்வர தமிழ் வர்த்தகர் ஒருவரும் இரகசியப் பொலிஸாரினால் அந்த நிலைமையில் கைது செய்யப்பட்டனர்

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து அத்தமிழ் இளைஞர் கைதானார் அவரிடமிருந்து 70 லட்சம் ரூபா பெறுமதியான அமெரிக்க டொலர்கள் மற்றும் ஜெர்மன் டொச்மார்க்குகளையும் இரகசியப் பொலிஸார் கைப்பற்றினார்கள்.

சிங்கப்பூருக்குச் செல்வதற்குத் தயாராக அந்த இளைஞர் விமான நிலையத்திற்குச் சென்றிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது

அந்த இளைஞர் விசாரணையின் போது வெளியிட்ட தகவல்களைத் தொடர்ந்து அவருக்கு பண உதவி வழங்கியதாகக் கூறப்படும் தமிழ்க் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரும் பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரஸ்தாப தமிழ் இளைஞர், விடுதலைப் புலிகளுக்கு ஆயுதக் கொள்வனவு செய்வதற்காக வெளிநாடு செல்லவிருந்தார் என்றும் விடுதலைப் புலிகளுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார் என்றும் இரகசியப் பொலிஸ் விசாரணையில் வெளிவந்ததாம்.

(ஒ-எ)

வடமராட்சி கிழக்கில் 66 பேருக்கு மூளை மலேரியா

யாழ்ப்பாணம் பெப். 10

வடமராட்சி கிழக்குப் பகுதியில்— நாகர்கோவில் முதல் செம்பியன்பற்று வரையுள்ள இடங்களில்— 66 பேர் மூளை மலேரியாவினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

அப்பகுதிகளில் மலேரியா சிகிச்சை மருந்து வழங்கப்பட்ட போதும், அங்குள்ளவர்களில் அனேகமானோர் ஒழுங்கான முறையில் மருந்தை உட்கொள்ளாததே நோய் தீவிரமடையக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது

கொம்படி போக்குவரத்து இடம்பெற்ற வேளையில், அப்பகுதிகளில் வழிப்போக்கர்கள் தங்கியதால் மலேரியா நோய்க் கிருமிகள் அங்கு பரவியிருக்கலாம் என நம்பப்படுகிறது

(ஒ 162)

ஜே. வி. பியினர் தீவிரம்; பொலீஸ் வேவு அதிகரிப்பு

கொழும்பு, பெப். 10

மாத்தறை, அம்பாந்தோட்டை, திஸ்ஸமகாராம, மற்றும் எம்பிலிப்பிட்டிய பகுதிகளில் ஜே வி பி. இயக்க நடவடிக்கைகள் மீண்டும் தலைதூக்கியுள்ளன என்று புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனைத் தொடர்ந்து இப்பகுதிகளில் பொலீஸார், வேவு நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

தென்பகுதியில் இனமும் வழிப்பறிக் கொள்ளைகளும் வீடு உடைப்புச் சம்பவங்களும் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மாகாணசபை தேர்தல்;

இடம்பெயர்ந்தவர்களும் வாக்களிக்க முடியுமாம்!

கொழும்பு, பெப். 10

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து தற்போது நாட்டின் ஏனைய பகுதிகளில் அகதிகளாக வாழும் அனைவரும் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களில் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த முடியும் என்றும்— இதற்கான தேர்தல் சட்ட [illegible] கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தேர்தல் ஆணையாளர் திரு சந்திரானந்த டி சில்வா தெரிவித்திருக்கிறார்.

கடந்த வாரம் தம்மைச் சந்தித்த முஸ்லிம் மக்களின் மனித பாதுகாப்பு அமைப்பான முஸ்லிம் தகவல் குழுவைச் சேர்ந்த தூதுக்குழுவினரிடமும் தேர்தல் ஆணையாளர் இத்தகவலைத் தெரிவித்தார் என்று கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

BOTANY
Mr. [illegible]

Paper & Revision

ஆரம்பம்:
11-2-93 3 PM

personal
New Science Centre
Ellilakam Front Lane
Jaffna.
(/4510)

SHORT - HAND & TYPING

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

வார நாள்: 15-02-93
வார இறுதி: 13-02-93

★ பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3rd. Cross Street,
Jaffna.

கூட்டுறவு ஊழியருக்கு ரூ.314 சம்பள படி வழங்குக!

ஊழியர் சங்கம் தீர்மானம்

கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு இதுவரை காலமும் வாழ்க்கைப் படியாக ரூபா 314ஐ வழங்காத கூட்டுறவுச் சங்கங்களும் வழங்கிய பின் தடை செய்த சங்கங்களும் உடனடியாக அதனைத் தவறவிடப்பட்ட சகல பணியாளர்களுக்கும் வழங்க வேண்டும்

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் ஒருங்கிணைந்த இணைப்புக் குழுக்கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 165/88ஆம் இலக்க சுற்று நிருபத்துக்கு அமைய 1-1-1988 இற்குப் பின்னர் சேர்ந்த பணியாளர்களுக்கு 314 ரூபா வாழ்க்கைப் படியை வழங்கக் கூடாது என அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டு, வாழ்க்கைப்படி பல தொழிலாளர்களுக்கு நிறுத்தப்பட்டது அதனைத் தொடர்ந்தே கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றியது.

அத்தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

ஆணைக்குழுவின் சுற்று நிருபத்தின் ஆறாவது பந்தியில் ரூபா 505இற்கு குறைந்த சம்பளம் பெற்ற பணியாளர்களை உடைய சங்கங்கள் ரூபா 505ஐ அடிப்படைச் சம்பளமாகவும், ரூபா 505இற்கு மேலாக வழங்கி வந்த சங்கங்கள் (பணியாளர்கள் அல்ல) தொடர்ந்தும் வாழ்க்கைப் படியை வழங்கலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளதே அன்றி படியை வெட்டும்படி எச்சந்தர்ப்பத்திலும் கூறவில்லை — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

(த)

உர விநியோகம்

தொண்டமானாறு, உடுப்பிட்டிப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, புலோலி கமநல சேவை நிலையத்தினூடாக இன்று அமோனியம் சல்பேற்று உரம் விநியோகிக்கப்படவுள்ளது

குடும்பப் பதிவு அட்டைக்கு தலா 10 கிலோ என்ற அடிப்படையில் உரவிநியோகம் இடம்பெறும்

இதேவேளை — நாளை மறுதினம் கரவெட்டிப் பகுதி விவசாயிகளுக்கும் எதிர்வரும் 15 ஆம் திகதி ஏனைய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கும் உர விநியோகம் இடம்பெறும்.

(த-109)

ஆய்வுக் கட்டுரை அச்சிடுதல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு ஆய்வுக் கட்டுரை புத்தக வடிவில் அச்சிட்டுத் தருவதற்குத் தகுதியான அச்சகர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

புத்தகத்தின் அளவு	— ½ கிரவுண்
பக்கம்	— 160 (அண்ணளவாக)
பிரதி	— 500 புத்தகங்கள்
படங்கள்	— 75 (தபால் அட்டை அளவில்)
புத்தகத்தின் கவர்	— தடித்த கடினமான மட்டையில் இரண்டு நிற அச்சுப் பிரதி செய்த கவர் இடப்படல் வேண்டும்

புத்தகத்தின் உள்ளடக்கத்தை இப் பல்கலைக் கழகக் கல்விக் கிளையில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 1993 — 02 — 17 காலை 10 00 மணிக்கு முன்பாக 'நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் 'ஆய்வுக் கட்டுரை அச்சிடல்' என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 1993 — 02 — 17 காலை 10. 30 மணிக்குத் திறக்கப்படும்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
இலங்கை

1993-02-09

(சி/45 2)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக்கிளைத் தலைமையலுவலகம்

ஊர்காவற்றுறைப் பிரிவின் ஒத்திவைக்கப்பட்ட விசேட பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (14-02-93) பிற்பகல் 2 00 மணிக்கு கிளையினால் நடாத்தப்படவுள்ளது 09 11-1992 வரை கிளையில் அங்கத்துவப் பணம் செலுத்தப்பட்ட அங்கத்தவர்கள் மாத்திரம் இக் கூட்டத்தில் பங்குபற்றலாம். இக் கூட்டத்துக்கு வருகை தருபவர்கள், தேசிய அடையாள அட்டையையும், 1992 அங்கத்துவ அட்டையோ அல்லது யாழ். கிளைத் தலைமையகத்தில் 1992 அங்கத்துவப் பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டையோ சமர்ப்பித்தல் வேண்டும் கூட்ட நிகழ்ச்சிகளைக் கிளைத் தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம். தனித்தனிக் கடிதங்கள் அனுப்பப்பட மாட்டா.

கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
09- 02-1993.

(சி/4513)

அ. தி. மு. க - இ. காங்கிரஸ் தமிழகத்தில் கயிறிழுப்பு

இரண்டு வாரங்களுக்கு இடையில் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் இரண்டு முறை தமிழகத்திற்கு விஜயம் மேற்கொண்ட பின்னரும்- காங்கிரஸ் - அ. இ. அ. தி. மு. க கூட்டணி பலமான நிலையில் இருக்கின்றது என்று பிரதமர் தெரிவித்த பின்னரும் கூட பரஸ்பரம் நம்பிக்கையில்லாத நிலையிலேயே இக் கூட்டணி செயற்படுவதாக தமிழகத்திலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

ராஜீவ் காந்தி சிலை திறப்பிற்காக சென்னைக்கு வந்த பிரதமர், ஜெயலலிதாவின் அழைப்பை ஏற்று நேரு விளையாட்டரங்கை திறந்து வைத்தது மட்டுமன்றி முதல்வர் ஜெயலலிதாவின் வீட்டுக்குப் போய் விருந்துண்டு கூட்டணி உறவு பலமாகத்தான் இருக்கிறது என்று திருவாய் மலர்ந்தார்.

ஆனாலும் தமிழ்நாட்டில் காங்கிரஸ் - அ. இ. அ. தி. மு. க கூட்டணியானது நித்திய கண்டம்- பூரண ஆயுசு என்ற நிலையிலேயே நீடிப்பதாகக் கருதப்படுகின்றது.

இந்தக் கூட்டணிக் கட்சிகளுக்கிடையேயான உறவில்விரிசல் எப்போது முதல் ஏற்பட்டது? ஏன் ஏற்பட்டது? என்பன போன்ற வினாக்களை எழுப்பி விடைகாண முற்படுவது நதிமூலம்? ரிஷிமூலம்? விசாரிப்பது போன்ற வேலையாகத்தான் போகலாம் எனினும், மதுரையில் அ. இ. அ. தி. மு க நடாத்தியமாநாடு அதன் பின்னர் இடம்பெற்ற ஒவ்வொருசம்பவங்களும்கூட்டணி உறவை விரிசலாக்கப் பெரிதும் துணை போயுள்ளனஎனக்கூறுவது மிகையானதாகாது. அதிலும் குறிப்பாக தேசிய ஒருமைப் பாட்டுக் கவுன்சில் கூட்டம் புதுடில்லியில் நடந்தபோது அதில் கலந்து கொண்ட முதல்வர் ஜெயலலிதா பாரதீயஜனதாவின் போக்கிற்கு ஆதரவு தெரிவித்துப்பேசியதும், பாபர் மசூதி இடிக்கப்பட்டமையைத் தொடர்ந்து தமிழகத்திற்கு இராணுவம் அனுப்பப்பட்டமையும், அ. இ. அ. தி. மு க பொதுக் குழுக் கூட்டத்தில் காங்கிரஸ் கட்சிபலமாகத்தாக்கப்பட்டமையும் இக்கூட்டணி உறவின் பூசல் பற்றி வெளிப்படையாக்கிய முக்கிய விவகாரங்கள் எனலாம்.

அ. இ. அ. தி. மு. கவின் உதவி இல்லாமற் போயிருந்தால் கடந்ததேர்தலின்போது காங்கிரஸ் கட்சி அகில இந்திய அளவிலேயே பூண்டோடு அற்றுப் போயிருக்கும் என்றும். இன்றைய நிலையில் தேர்தல் நடந்தால் காங்கிரஸ் கட்சி எந்த மாநிலத்திலும் எதிர்க்கட்சியாக கூட வரமுடியாது என்றும், அ.இ. அ தி. மு க வினர் காங்கிரஸ் கட்சியின் மீது விமர்சனத் தாக்குதல் தொடுத்தபோது இரு கட்சிகளுக்கும் இடையிலான உறவு ஏறக்குறைய முறிந்துவிட்டது என்றே பொதுவாகக் கருதப்பட்டது.

இந்த நிலையில் அ. இ. அ. தி. மு. க. வின் உறவு வேண்டுமானால் அகில இந்திய அளவில் காங்கிரஸ் கட்சியின் தலைமை மாறவேண்டும் என்று பிரதமர் நரசிம்மராவின் பதவிக்கே வேட்டுவைக்கும் வகையில் அ. இ. அ. தி. மு கவினர் நிபந்தனை விதித்தனர். இதனால் தமிழகக் காங்கிரஸ்காரர்களுக்கும் ரோஷம்பிறக்க அறிக்கைப் போர் சூடுபிடித்தது. இனி மேல் எவரின் கூட அ இ அ தி. மு கவின் உறவு வேண்டாம் என்று சில காங்கிரஸ்காரர்கள் தமது மேலிடத்திடம் கெஞ்சாத குறையாக அறிக்கை வெளியிட்டார்கள். சிலர் அ. இ அ தி. மு க விற்கு விபரீத புத்தி என்று வர்ணித்தனர்.

ஆனாலும் ஜெயலலிதா வீட்டு விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட பின்னர் நரசிம்மராவ் கூட்டணி நீடிக்கும் என்று அறிவித்த பின்னர் . தமிழகக் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி பதவி நீக்கப்பட்டாலேயே கூட்டணி நீடிக்கும் என்றது அ இ. அ தி மு. க.

மூச்சுக்கு முந்நூறு தடவை ஜெயலலிதா புகழ் பாடிய வாழப்பாடிக்கு நேர்ந்த கதி கண்டு கலங்கிய காங்கிரஸ் தொண்டர்கள் கூட்டாக அறிக்கைகள் வெளியிட்டனர்.

வாழப்பாடியை பதவிநீக்கி விட்டால் தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சி சூன்யமாகி விடும். பலவீனமான காங்கிரஸ் கட்சியைமிரட்டிப் பணிய வைக்கலாம்.என்று அ. தி மு.க கனவு காண்கிறது என்று தெரிவிக்கு காங்கிரஸ்காரர்கள் தமிழ்நாட்டிலமைந்துள்ள ஊழல்களின் பட்டியல் மத்திய அரசிடம் குவிந்துபோயுள்ளது என்று எச்சரிக்கை செய்துள்ளனர்.

அத்துடன் அ தி மு க வின் அமைச்சர்களும், கட்சி நிர்வாகிகளும், கைகட்டி வாய் பொத்தி சேவகம் செய்வது போல காங்கிரஸ் கட்சியும் வாழப்பாடியும் முதலமைச்சருக்கு சேவகம்செய்ய வேண்டுமெனஜெயலலிதா எதிர்பார்ப்பதாகவும் இது ஒரு போதும் நடக்காது எனவும் காங்கிரஸ் காரர்கள் தமதுஅறிக்கைகளில் குறிப்பிட்டனர்.

அ இ. அ. தி மு. கவினதும் முதல்வர் ஜெயலலிதாவினதும் செல்வாக்கு நாளுக்கு நாள் படிப்படியாக குறைவடைந்து வருவதாகவும், கோடிக்கணக்கில் செலவிட்டுத்தான் கூட்டத்திற்கு ஆள் திரட்ட முடிகின்றது என்றும் பக்கச் சார்பற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேபோல் மத்திய அமைச்சரவை விஸ்தரிக்கப்படும் போதாவது தமக்கும் ஓர் இடம் கிடைக்கும் என்று வாழப்பாடி எண்ணியிருந்ததாகவும் அந்த நம்பிக்கை வீணாகிப் போன நிலையில் வாழப்பாடியார் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது,

எது எப்படியாயினும் இரு கட்சிகளின் உறவு எப்படி இருக்கின்றது என்பதை அவ வி- இது ஒரு வகை மாதிரியே ஆகும். பிரதமர் நரசிம்மராவும் முதல்வர் ஜெயலலிதாவும் கூட்டணி ஒற்றுமையைக் காப்பாற்றும் எண்ணம்கொண்டிருந்தால் கூட எதிர்வரும் இடைத் தேர்தல் வரையுமாவது கூட்டணி நீடிக்கும் என்று நம்பிக்கை கொள்ள இடமிருப்பதாகத் தெரியவில்லை

இளையவன்

வருமான குறைவை நிரூபித்தால் புலமைப் பரிசு

ஆண்டு 5புலமைப் பரிசுப்பரீட்சைக்குத்தோற்றும்போதுள்ள மாணவன் ஒருவனின் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலரின் வருமானம்ரூபா6000/-க்கு அதிகமாகவிருந்து பின்னர் பல்வேறு காரணங்களால் இவ்வருமானம் வீழ்ச்சியடையுமாயின் பரீட்சையில் சித்தியடைந்த மாணவனுக்கு உதவித்தொகை வழங்க தம்மால் நடவடிக்கை எடுக்கப்படுவதாக வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதம கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இதற்காக இவர்களது வருமான அத்தாட்சிப் பத்திரத்துடன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இறந்திருப்பின் அவர்களது இறப்புச் சாட்சிப் பத்திரம், பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வருமானத்தில் மாற்றங்களை நிரூபிக்கும் சான்றுகள், புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும்போது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஆற்றிய தொழில், பெற்ற வருமானம் என்பவை பற்றிய விபரங்களையும் அனுப்பி வைக்குமாறும்அவர் பணித்துள்ளார் [17

மெய்வல்லுனர் போட்டி

யாழ். கன்னியர்மடம் பாடசாலை மாணவிகளின் மெய்வல்லுனர் போட்டிகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 00 மணிக்குபுனிதசம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.வேலாயுதம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக உடற்கல்வி, உதவிப் பணிப்பாளர் த. அருணகிரிராஜா, தமிழ்மொழிக் கல்விப் பொறுப்பாளர் வே. இளங்குமரன், புனித சம்பத்திரிசியார்கல்லூரி அதிபர் வண. எ ஐ பேனாட் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். [21]

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக்கிளைத் தலைமையலுவலகம்
ஊர்காவற்றுறைப்பிரிவின்
ஒத்திவைக்கப்பட்ட
விசேட பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் ஞாயிற்றுக்கிழமை [14-02-1993] பிற்பகல் 2 00 மணிக்குக் கிளையில் நடாத்தப்படவுள்ளது. 09-11-1992 வரை கிளையில் அங்கத்துவப்பணம் செலுத்தப்பட்ட அங்கத்தவர்கள் மாத்திரம் இக்கூட்டத்தில் பங்குபற்றலாம். இக்கூட்டத்துக்கு வருகை தருபவர்கள், தேசிய அடையாள அட்டையையும், 1992 அங்கத்துவ அட்டையோ அல்லது யாழ் கிளைத்தலைமையகத்தில் 1992 அங்கத்துவப்பணம் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டையோ, சமர்ப்பித்தல் வேண்டும். கூட்ட நிகழ்ச்சிகளைக் கிளைத் தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம். தனித்தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

73, கண்டிவீதி,
யாழ்ப்பாணம்.
09-02-1993.

கௌரவ செயலாளர்.

[பி 5269]

பெற்றார் தினவிழாவும் பரிசளிப்பும்

[யாழ்ப்பாணம்]

யாழ் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வருடாந்த ''பெற்றோர் தினவிழாவும் பரிசளிப்பு விழாவும்'' நாளை மறு தினம் பிற்பகல் 5 00 மணிக்கு கல்லூரியின் மைதானத்தில் மேற்படி அதிபர் ந அனந்தராஜ் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் முதன்மை விருந்தினராக மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவரும் யாழ் பல்கலைக்கழகத்தின் உபவேந்தருமாகிய பேராசிரியர் அ. துரைராஜா அவர்களும் பரிசில்களை வழங்குநராக திருமதி இ. துரைராஜா அவர்களும் கலந்து கொள்கின்றனர்.

மேலும் இந் நிகழ்வில் கல்லூரி மாணவ மாணவியரின் 'பான்ட்' வாத்திய அணிவகுப்பும் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன.

உலர் உணவு விநியோகம்

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்றுறைபலநோக்கு கூட்டுறவுச்சங்கம் ''அ'', ''உ'' உலர் உணவு அட்டைகளுக்கானபொருள் விநியோகத்தை நேற்று முன்தினம் முதல்மேற்கொண்டு வருகின்றது.

உலர் உணவாக ஓர் அங்கத்தவருக்கு 1 கிலோ அரிசி 2 கிலோ மா, 500 கிராம் சீனியும் 2 அங்கத்தவர்களுக்கு 2 கிலோ அரிசி 2 கிலோ மா, 750 கிராம் சீனியும் மூன்று அங்கத்தவர்களுக்கு3 கிலோ அரிசி, 3 கிலோ மா 1 கிலோ சீனியும், 4 அங்கத்தவர்களுக்கு 4கிலோ அரிசி 4 கிலோ மா, 1500கிராம் சீனியும், 5 ம் அதற்கு மேலும் உள்ள அங்கத்தினருக்கு 5 கிலோ அரிசி, 5கிலோ மா, [illegible] படும் எனவும் முகாமையாளர் அறிவித்துள்ளார்.

குடாநாட்டிற்கு வெளியே நெல்லின் விலை வீழ்ச்சி

[கிளிநொச்சி]

குடாநாட்டுக்கான பாதைத் தடையால் கிளிநொச்சி முல்லைத்தீவுப் பகுதிகளில் நெல்லின்விலைவீழ்ச்சிகண்டுள்ளது.

யாழ். குடாநாட்டுடனான போக்குவரத்துப் பாதை சீரின்மையால் அறுவடை செய்த நெல்லை சந்தைப்படுத்த முடியாமல் கிளிநொச்சி,முல்லைத்தீவு விவசாயிகள் பெரிதும் பாதிப்புற்றுள்ளனர். கடன் பட்டு விதைத்த விவசாயிகளே இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அறுவடை முடிந்ததும் நெல்லை விற்று தமது வாழ்க்கைச் செலவை ஈடுசெய்து வந்த விவசாயிகள் இம்முறை நெல்லை உடன் விற்க முடியாத நிலையினாலும் தமது நெல்லின் விலைதொடர்ந்தும் வீழ்ச்சி அடையலாம் என்றும் கவலை கொண்டுள்ளனர்.

சனசமூக நிலையங்கள் சமூகப்பணி செய்யவேண்டும்

உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

(குருநகர்)

''இன்றைய போர்க்கால சூழ்நிலைக்கு ஏற்ப சனசமூக நிலையங்கள் சமூகப்பணியாற்ற முன்வரவேண்டும்.எதிர்காலத்தில் இளந்தலை முறையினரிடம் இந்த நிலையத்தை ஒப்படைக்கும் போது ஒரு சுதந்திரமான பூமியில் நாம் இருக்க வேண்டும் முன்னோடிகளாக இருந்த முதியவர்களையும் மறந்து விடக்கூடாது ''

இவ்வாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலால தெரிவித்தார். ஆனைக்கோட்டை. உயரப்புலம் ஐக்கிய சனசமூக நிலையத்தினர் கடந்த 6-ஆம் திகதி சனிக்கிழமைமாலை 5 மணிக்கு புனித அடைக்கலநாயகி கலையரங்கில் நடத்திய 40 ஆவது ஆண்டு விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்து பேசுகையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்,

நிலையத்தலைவர் திரு த. சிமியோன் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது

பங்குத்தந்தை வண - சகாயதாசன் அடிகள் நல்லூர் உதவி அரச அதிபர் திரு. ஆ மகாலிங்கம் திரு. ஆதவன் ஆகியோரும் கருத்துரை வழங்கினர். நாட்டியம், நாடகம், மெல்லிசை ஆகிய கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன,

நிவாரணப் பொருள்களுக்கு கூட்டுப்படை அனுமதிமறுப்பு

(யாழ்ப்பாணம்)

செப்டம்பர் 1992ற்கு பின்னர் கூட்டுப்படைத் தலைமையகம் நிவாரணப் பொருட்களை வடபகுதிக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கவில்லையென மனித முன்னேற்ற நடு நிலையத்தின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இந் நிலையத்தால் வழங்கப்பட்டு வந்த நிவாரண உதவிகளைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அச் செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளது.

எனவே இறந்த அல்லது காயமடைந்த அல்லது ஊனமுற்றவர்களின் குடும்பங்களுக்கும். இராணுவத்தால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் குடும்பங்களுக்கும், பாடசாலைக்கு செல்லும் அநாதைக் குழந்தைகளுக்கும், நிலையத்தால் பராமரிக்கப்படும் முகாம்களில் வாழ்வோருக்கும் மட்டுமே மனித முன்னேற்ற நடுநிலையம் உதவிகள் வழங்கும் என்றும் அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

31- ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்

அமரர்

மாரிமுத்து சந்தனம்

திதி : 10-02-93

அந்தியேட்டிக் கிரியையும் வீட்டுக்கிருத்தியமும்இன்று (10-02-1993) புதன் கிழமை அரியாலையில் நடைபெறும்.

52 நெடுங்குளம் றோட்,
அரியாலை.
(4241)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. பொருளியலில் பேராசிரியர்
2. நுண்கலையில் பேராசிரியர்
3. பொருளியலில்சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
4. கல்வியியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
5. வர்த்தகத்தில்/முகாமைப் படிப்புகளில் /வர்த்தக கைத்தொழிற்சட்டத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்11/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)

*** கல்வியியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11/உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)

** பட்டப்படிப்புத் தரத்தில் வரலாற்றினை ஒரு பாடமாக கொண்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் அத்துடன் உயர்பட்டதாரி மட்டத்தில் கல்வித்தத்துவப்பரப்பில் கடமையாற்றக்கூடியவராக இருத்தல்வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்:-

பதவிகள் :-

பேராசிரியர் ரூபா 12 000 -6x300- 14, 000/- (மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 ரூபா 9600-8x250 -11 600/- (மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11

ரூபா 8000 5x250 9250/- (மாதமொன்றுக்கு)

உதவி விரிவுரையாளர் ரூபா 3900/- நிலையானது (மாதமொன்றுக்கு)

இத்துடன் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பும் வழங்கப்படும்.

** துறைத்தலைவரினாலும் பீடாதிபதியினாலும் ஓராண்டுச்சேவையை திருப்திகரமாக நிறைவு செய்தவரென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவரை விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவிப் பெயரில் நியமிக்கலாம் என்பதுடன் துணைவேந்தர் அவரை ரூபா 4500-10x200 - 6500/- (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத்திட்டத்தில் வைக்க முடியும்.

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி 1993 04-30 ஆகும். ஏனைய பதவிகளுக்கான முடிவுத்திகதி 1993-03- 9.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்பத்திரங்களை ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்தி பல்கலைக்கழகத்தின் சிரேஷ்டஉதவிப் பதிவாளர்/தாபனக்கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். தபால்மூலம் இவ் விண்ணப்பப் படிவங்களைப் பெறவிரும்புவோர் அதற்கான வேண்டுகோளுடன் பதிவாளர் / நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் ரூபா 20/-க்கான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையுடன் 23x10 ச மீ அளவுடையதும், சுயமுகவரியிடப் பட்டதும், ரூபா 2/ முத்திரை ஒட்டப் பட்ட தபாலுறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கதிணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகள் ஆகியவற்றில் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கவிரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்பு தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின்பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993 02 05

[சி/5961]

சமூகமளிக்கவும்

யாழ் கோட்ட பாடசாலைகளில் சேவையாற்றும் முகாமைத்துவப் பயிற்சி பெறாத பிரதி அதிபர்கள் உப அதிபர்கள், பகுதித் தலைவர்கள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு யாழ். கோட்டக் கல்வி அலுவலகத்திற்குச் சமூகமளிக்குமாறு யாழ் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளரினால் கேட்கப்பட்டுள்ளனர்.

கொட்டகைகளை திருத்த முடிவு

யாழ் மாவட்டத் திணைக்களங்களுக்கான புனர்நிர்மாணம் புனரமைப்பு பற்றிய கலந்துரையாடல் யாழ் திட்டப் பணிப்பாளரினால் செயலகத்தில் நேற்று முன்தினம் நடாத்தப்பட்டது.

நடப்பு வருடத்துக்கான புனர்நிர்மாணம்பற்றிய கலந்துரையாடலில் திணைக்கள தலைவர்கள், அதிகாரிகளை கட்டடங்கள் மீள் நிர்மாணம் பற்றியும், கொட்டகைகள் திருத்தி அமைப்பதுபற்றியும் கட்டடங்களுக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றியும் பூரண அறிக்கை ஒன்றை தயாரித்து வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்

மேற்படி அறிக்கைகள் தயாரித்து வழங்கி தம்இதசம்பந்தமான புனர்நிர்மாணநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக தெரியவருகின்றது. (சி/ பா)

பரிசளிப்பு விழா

கோண்டாவில் இந்து மகாவித்தியாலய பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு பாடசாலை திறந்த வெளி அரங்கில் பாடசாலை அதிபர் செல்வி மா. மார்க்கண்டு தலைமையில் இடம் பெறவுள்ளது இந்நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

DAY CLASSES

விஞ்ஞானப்பிரிவு,
பிரத்தியேக
வகுப்புகள்

செவ் - வியாழன்
8.00 மணி - 1 00
மணிவரை

விபரங்களுக்கு:-

நிர்வாகி,

**புதிய சயன்ஸ்
சென்ரர்**

(சி-5953)

31-ம்நாள் நினைவு தினம்

10-02-1993

அமரர் திரு. மு. மாணிக்கம்

(வராத்துப்பளை- பருத்தித்துறை)

அன்னை மடியில் 07-03-1925

ஆண்டவன் மடியில் 11-01-1993

எமைக் காக்க, வாழ்ந்திட்ட ஐயாவே!
எமை விட்டு மனமிறுகி பிரிந்தது - தென்ன !
பாசம் கொட்டி பண்பாய் வளர்த்த தந்தையே!
நேசம் நீத்து இறையடியில நிம்மதியடைந்திரே!!

"தங்கஸ்தான்"
வராத்துப்பளை.
பருத்தித்துறை.
10-2-93

மனைவி, மக்கள்
மருமக்கள், பேரர்கள்
உற்றார், உறவினர்

(சி/5970)

பிறந்தநாள் வாழ்த்து

10. 2. 93

செல்வன் லிதர்சன்

மகேஸ்வரன் இராணிவிமலா தம்பதிகளின் தவப்புதல்வன் செல்வன் லிதர்சன் 10 2 93இன்றுதனது முதலாவது பிறந்த நாளை அச்சுவேலி தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் சிறப்பாக கொண்டாடுகிறார்.

இவரை கொழும்பிலுள்ள அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாளிமார், "கலா" அண்ணா, குட்டித் தங்கச்சி மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் உலவிக்குள சித்திவிநாயகர் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

(4249) - குடும்பத்தினர்

நல்லூர் பிரதேசசபை - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

கேள்வி அறிவித்தல் - 1993

13-11-1992 ஆம் திகதிய ஈழநாதம் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கீழ்காணும் இறைச்சிக் கடைகளுக்கு என்னால் கேள்விகள் மீளவும் கோரப்படுகின்றன

கேள்விப் பத்திரங்கள் யாவும் நல்லூர் பிரதேசசபை செயலாளரால் கேள்விவைப்புப் பணம், பத்திரப்பணம் ஆகியன செலுத்தியதன் பேரில் 15-02-1993 நண்பகல் 12 00 மணிவரை வழங்கப்படும் கேள்விகள் யாவும் 16-02-1993 நண்பகல் 12 00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்கள் தேவைப்படின் கந்தோரில் பெற்றுக் கொள்ளவும்.

இல.	குத்தகையின் தன்மை	கே.ப. பணம்	கே.வை. பணம்	மதிப்பீட்டுத் தொகை
1	ஆடியபாதம் சந்தை மாட்டிறைச்சிக்கடை	200/-	1000/-	14 500/-
2	கொக்குவில் உப-அலுவலக ஆட்டிறைச்சிக்கடை	200/-	500/-	9,500/-

நல்லூர் பிரதேசசபை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
08-02-1993.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்
நல்லூர் பிரதேசசபை.

(சி-5963)

உதயன்

இன்னும் எத்தனையோ?

வெளி மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த சுமார் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பூநகரி ஆலங்கேணியில் பயணம் தடைப்பட்டு அங்கு தரித்து நிற்கின்றனர். அவ்வாறு தரித்து நிற்கும் மக்களிடையே தொற்று நோய்கள் தீவிரமாகப் பரவி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணமாவட்டம் வெளிப் பிரதேசங்களில் இருந்து கடந்த பல மாதங்களாக முற்றாகத் துண்டிக்கப்பட்டிருப்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அரசாங்கம்—படைகள் ஏற்படுத்திய இத்துண்டிப்பினால் பாதிக்கப்பட்ட மக்கள் வேறு மாற்று மார்க்கம் இன்றி ஆபத்தான கடற் பயணமெனத் தெரிந்தும் கிளாலி—ஆலங்கேணிப் பாதையைப் பயன்படுத்தத் தொடங்கினர். அதனையே பாவிக்க வேண்டிய தவிர்க்க முடியாத கட்டாயத்திற்கு ஆளானார்கள்

இதனை அரசாங்கத்தினால் சகிக்க முடியவில்லை குடாநாட்டு மக்களை நெருக்கும் பல்வேறு அழுத்தங்களில் ஒன்றாக நடமாட்ட — போக்குவரத்து — உரிமையையும் பறித்துவிட வேண்டும் என்ற தனது திட்டம் தோல்வி அடைந்து போனதை அதனால் பார்த்துக் கொண்டிருக்க இயலவில்லை. உடனே கிளாலி போக்குவரத்துப் பாதையைத் தடை செய்யப்பட்ட பிரதேசமாக அறிவித்தது. கடல் நீரேரி ஊடாகச் செல்லும் படகுகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. எனினும் மக்கள் தமது உயிரைப் பணயம் வைத்தும் அப்பாதை ஊடாகவே பயணம் செய்து வந்தனர் ஆனால் ஜனவரி 2 ஆம் திகதி இரவு கடற்படையினர் கிளாலிக் கடலில் நடத்திய கொடூரப் படுகொலைகளின் பின்னர் படகுச் சேவை மந்தமடைந்தது ஒழுங்காக, சீராக நடக்க முடியவில்லை. வாரத்தில் இரண்டொரு நாட்கள் மட்டுமே நடந்தது ஆனால் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக படகுச் சேவை முற்றாக ஸ்தம்பித்து விட்டது.

அதனாலேலேயே கொழும்பிலிருந்தும் ஏனைய பகுதிகளில் இருந்தும் வந்த ஆயிரக்கணக்கான மக்கள் ஆலங்கேணியில் தரிக்க வேண்டியதாயிற்று. இரவில் கொடும் பனியும் பகலில் கொளுத்தும் வெயிலும் வாட்டும் பருவகாலம் இது. தங்குவதற்கு போதிய வசதிகளின்றி மக்கள் நெருக்கமாகத் தங்கும் போது தொற்றுநோய்கள் பரவுவது தவிர்க்கமுடியாததாகும். பயணம் தடைப்பட்ட மக்கள் வெட்டவெளிகளில் படுத்துறங்கும் அவலம் சொல்லும் தரமன்று.

இவை அரசு தமிழர்களை இம்சைப்படுத்தி அவர்களுக்கு நெருக்குதல்களைப் போட்டு உரிமைப் போராட்ட வழியில் இருந்து திசை திருப்புவதற்கான மார்க்கங்களில் ஒன்றாகும்.

தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடை விதித்து பட்டினி போட்டுக் கொல்வது. மருந்துகளையும், டாக்டர்களையும் அனுப்பாது அவர்கள் நோயினால் பெரும் எண்ணிக்கையில் மடியவிடுவது. இவை போன்றே போக்குவரத்துத் தடை மூலம் அவர்களை இம்சைப்படுத்துவதும் நோயாளர்களாக்கி மரணமடையச்செய்வதும் அரசின் உள் நோக்கம் என்பது நன்றாகப் புலனாகின்றது தமிழர்களுக்கு எந்தெந்த வழிகளால் தொல்லையும் கஷ்டமும் கொடுக்க இயலுமோ அந்தந்த முறைகளை எல்லாம் நடைமுறைப்படுத்துவதே அரசின் குறிக்கோளாக இருக்கிறது.

தமிழர்களின் மிக அடிப்படையான, வாழ்வுக்கு அத்தியாவசியமான உரிமைகள், வசதிகளைத் தட்டிப் பறித்து அவர்களின் வாழ்வை நிர்மூலமாக்கி அழித்து விட நினைத்த அரசு இன்னும் எத்தனை எத்தனை அட்டூழியங்களைச் செய்யத் திட்டமிட்டுள்ளதோ?

இன்று

அராலி மேற்கு வள்ளியம்மை ஞானவித்தியாசாலையில் நிரந்தரமாக அமைக்கப்பட்ட கொட்டகை மண்டபம் இன்று புதன்கிழமை திறக்கப்படவிருக்கிறது (க-161)

o o o

யாழ் கோட்டப் பாடசாலைகளில் சேவையாற்றும் முகாமைத்துவப் பயிற்சி பெறாத பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், பகுதித் தலைவர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று, இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என யாழ். கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க)

o o o

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ். பல்கலைக்கழக புவியியற் சமூகத்தினரின் ஏற்பாட்டில் நடத்தப்படும் கருத்தரங்குத் தொடரின் மூன்றாம் அமர்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு புவியியற்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்

"மத்திய கிழக்கு நாடுகளும் பிரச்சினைகளும்" என்ற தலைப்பில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுவார்.

o o o

எதிர்வரும் அனைத்துலக மகளிர் தினத்தை முன்விட்டு விடுதலைப்புலிகள் ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்குத் தொடரில் இன்று மாலை 6 மணிக்கு தொல்புரம் மேற்கு கலைவாணி சனசமூக நிலையத்தில் மகளிர் தினக் கருத்தரங்கு ஒன்று நடைபெறும். (த-30)

o o o

வண்ணார்பண்ணை, பெப் 10

இடம்பெயர்ந்த பனைத் தொழில் வல்லுநர்களைக் குடியமர்த்தலும் தொழில் வாய்ப்பு பயிற்சி அளித்தலும் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்று இன்று நண்பகல் 12 மணியளவில் தாவடியிலுள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்திற்கு முன்பாக உள்ள பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தில் நடைபெற உள்ளது (உ-162)

நாளை

மானிப்பாய், பெப். 10

உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். பாடசாலை அதிபர் திரு. அ. ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் வட மாநிலகல்விப் பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். [த-90]

* * *

வட்டுக்கோட்டை பெப் 10

அராலி இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்

யாழ் மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரை தியாகராசா பிரதம விருந்தினராகவும், வலிகாமம் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. கே. சந்திரா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். (க-161)

சங்குப்பிட்டிப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதையில் படையினர் நிலை கொண்டிருந்தாலும் —

அதன்பின் அப்பகுதியில் இருந்து இராணுவம் படிப்படியாக வாபஸ் பெறப்பட்டு அந்தப் பாதை முழுமையாக ஐ. நா. அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் வரும் என்றும்

அதனைத் தொடர்ந்து பயணிகள் சேவை ஆரம்பிக்கப்படும் என்றும்

எதிர்பார்க்கப்படுவதாகக் கொழும்புச் செய்திகள் மேலும் தெரிவித்தன (உ-3-5)

பயணிகள்...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைச் சங்க சர்வதேசக் குழுவினர் கருதுவதாகவும் மற்றொரு செய்தி தெரிவித்தது. (ட-5)

புதிய விமானங்கள், ஹெலிகள்
உடனடியாக யுத்த முனைக்கு!

பாதுகாப்பு அமைச்சு அவசர நடவடிக்கை

கொழும்பு, பெப் 10

பிறநாடுகளில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட போர் விமானங்கள் மற்றும் ஹெலிக்கொப்டர்களை உடனடியாக போர்முனைக்கு அனுப்புவதற்கு தேவையான அவசர நடவடிக்கைகளை எடுப்பதில் பாதுகாப்பு அமைச்சு ஈடுபட்டுள்ளது

ஆர்ஜென்ரீனாவின் இரண்டு புக்காரா ரக போர் விமானங்கள் ஏற்கனவே வந்து விட்டன இம்மாதத்தில் சோவியத் தயாரிப்பான மி-17 ஹெலிக்கொப்டர்கள் கொழும்பு வந்து சேரவுள்ளன.

தற்போது பழுதடைந்துள்ள—சீனத் தயாரிப்பான —வை-8 ஹார்பின் போக்குவரத்து விமானத்துக்குத் தேவையான உதிரிப்பாகங்களை விமான மூலம் அனுப்பி வைக்கும்படி சீனாவுக்கு "ஓடர்" அனுப்பப்பட்டுள்ளது. இன்னொரு சீன வை-8 விமானம் கடந்த ஆண்டு போர் முனையில் சுட்டுத் தகர்க்கப்பட்டது தெரிந்ததே.

தற்போது இராணுவத்திடம் உள்ள சலாடின், பெரெட் கவச வாகனங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்களை பிரிட்டனிடம் இருந்து பெறவும் "ஓடர்" அனுப்பப்பட்டுள்ளது. ஆயுதக்கொள்வனவுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை பிரிட்டன் அண்மையில் நீக்கியதைத் தொடர்ந்து இது சாத்தியமாகியதாக தெரிவிக்கப்படுகின்றது சலாடின், பெரெட் கவச வாகனங்கள் பிரிட்டிஷ் தயாரிப்புகளாகும். இவ்வாகனங்கள் பாவிப்பதற்குத் தேவையான வெடிப்பொருள்களையும் பெறுவதற்கான ஓடர்களும் பிரிட்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இத்தகவல்களை "சண்டே ரைம்ஸ்" வெளியிட்டிருக்கிறது. (உ-எ)

தமிழக குண்டு வெடிப்புடன்
புலிகளுக்குத் தொடர்பில்லை!

முதல்வர் ஜெயலலிதா சபையில் அறிவிப்பு

சென்னை, பெப். 10

இந்தியக் குடியரசுத் தினத்துக்கு முதல்நாள் தமிழ்நாட்டில் இடம்பெற்ற மூன்று குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் தொடர்பு இல்லை என்று முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று அறிவித்தார்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு இடதுசாரி தீவிரவாதிகள் தான் பொறுப்பு என்றும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

குடியரசு தினத்துக்கு முதல் நாள் விழுப்புரத்தில் காந்தி சிலை ஒன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட சம்பவம் பற்றி இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு வி. தண்டாயுதபாணி கடந்த திங்கள் தமிழக சட்டசபையில் கொண்டு வந்த கவனஈர்ப்புத் தீர்மானம் தொடர்பாக முதலமைச்சர் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தார்.

அந்த அறிக்கையிலேயே செல்வி ஜெயலலிதா முன் கண்ட தகவலை வெளியிட்டார்.

மற்றும் இரண்டு இடங்களில் காங்கிரஸ் அலுவலகங்களுக்குள் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் குறித்தும் முதலமைச்சரின் அறிக்கையில் விவரிக்கப்பட்டிருந்தது

இம்மூன்று சம்பவங்கள் தொடர்பாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தமது அறிக்கையில் முதலமைச்சர் தெரிவித்திருந்தார்

அதன் பின்னர் காங்கிரஸ் உறுப்பினர் திரு. ஜானகிராமன் எழுந்து. குண்டு வெடிப்புச்சம்பவங்கள் இடம்பெற்ற இடங்களில் விடுதலைப் புலிகள் தலைவர்களில் ஒருவரான திரு. கிட்டுவை போற்றி துண்டுப்பிரசுரங்கள் காணப்பட்டன என்பதை முதலமைச்சருக்குச் சுட்டிக் காட்டினார்.

இந்தப்பின்னணியில் குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் தொடர்பில்லை என்ற கூற்றுக்கு முதலமைச்சர் விளக்கம் தரவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர் பாலசுப்பிரமணியம் கேட்டார்.

அந்தக் கேள்வியை எழுப்ப சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா அனுமதி வழங்க மறுத்துவிட்டார்.

இதனை ஆட்சேபித்து இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுபட்டு சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இதன் பின்னர் சபைக்கு வெளியே எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர் பாலசுப்பிரமணியம் செய்தியாளர்களிடம் பேசுகையில் —

மூன்று குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக இன்னமும் யாரும் கைது செய்யப்படாத நிலையிலும், விசாரணைகள் முடியாமல் இருக்கும் இத்தருணத்தில், விடுதலைப் புலிகள் இச் சம்பவங்களில் சம்பந்தப்படவில்லை என்று முதலமைச்சர் வாதிப்பது நியாயமில்லை என்று சொன்னார்.

தமிழக சட்டசபைக் கூட்டத்தொடரில் திங்கள் இடம் பெற்ற சம்பவங்களின் போது வெளிநடப்புச் செய்வதில் காங்கிரஸ் உறுப்பினர்கள் மத்தியில் நிலவிய கருத்து வேறுபாடுகள் நேற்று நீங்கியிருக்கக் காணப்பட்டது இது அரசியல் [illegible] வாய்த்தது என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். (உ-எ)

அ.தி.மு.க.— காங்கிரஸ்
நேற்று வாக்குவாதம்

சென்னை, பெப். 10

தமிழக சட்டசபையில் நேற்று அ.தி.மு.க உறுப்பினர்களும் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களும் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாட்டுப் பிரிவில் பிளவு ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகத்துக்கு சபாநாயகர் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று சபையில் முதலமைச்சர் ஜெயலலிதா கூறியதை தொடர்ந்து, சபையில் கூச்சலும் குளப்பமும் நிலவியது

கேள்வி நேரம் முடிவடைந்ததும் முதலமைச்சர் எழுந்து —

"காங்கிரஸ் உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் திங்கள் வெளிநடப்புச் செய்ய இன்னொரு பிரிவினர் சபையில அமர்ந்திருந்ததனால் அது வெளிநடப்பாகுமா? மேலும் காங்கிரஸில் உள்ள ஒரு பிரிவினர் மட்டும் வெளிநடப்புச் செய்ததால் அக்கட்சி இரண்டாக பிளவு பட்டுள்ளதா என்ற ஐயங்களுக்கு சபாநாயகர் விடையளிக்க வேண்டும்" — என்று கேட்டுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து இரு தரப்பு உறுப்பினர்களும் ஒருவரை ஒருவர் குற்றஞ் சாட்டினார்.

அறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்த காலத்து நிகழ்ச்சிகளை அப்போது எதிர்க்கட்சித் தலைவர் பாலசுப்பிரமணியம் சுட்டிக்காட்டி, "பொறுப்பில் உள்ளவர்கள் இவ்வாறு பேசுவது முறையல்ல"—என்று சொன்னார்.

முதலமைச்சருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையில் மாறி மாறி விவாதங்கள் தொடர்ந்தன. அக்கட்டத்தில் சபாநாயகர் குறுக்கிட்டு, காங்கிரஸில் பிளவு ஏற்பட்டதாகத் தமக்குத் தகவல் இல்லை என்று சொன்னார்.

விடுதலைப் புலிகளைக் காப்பாற்ற தமிழக அரசு முயல்வது போல் தோன்றுவதாக காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் சொன்னபோது, அவையில் கூச்சலும் குழப்பமும் எழுந்தன. (உ-எ)

நான்கு..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வடபகுதியில் உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாதவண்ணம் அடுத்த வாரம் போதிய உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படும் — என்று அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் ஜெனரல் ஜனாப் எம். ஐ. எம். ரபீக் கொழும்பில் தெரிவித்திருக்கிறார்

கொழும்புத் துறைமுகத்தில் இரண்டு கப்பல்களில் 5 ஆயிரம் மெட்ரிக் தொன் உணவுப் பொருள்கள் ஏற்றப்பட்டுள்ளன.

இப்போது 3 ஆயிரம் மெட்ரிக் தொன் உணவுப் பொருள்கள் ஏற்றும் வேலை துரிதமாக இடம் பெறுவதாகவும் —

ஆயிரத்து 800 மெட்ரிக் தொன் பொருள்கள் மற்றக் கப்பலில் இரண்டொரு தினங்களில் ஏற்றப்படும் என்றும் — ஜனாப். ரபீக் மேலும் தெரிவித்தார்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பட்டினி நிலைமையைத் தவிர்க்க தாம் நடவடிக்கை எடுப்பதாக வெளிநாடுகளுக்கும், சர்வதேச தொண்டர் நிறுவனங்களுக்கும் காட்டிக் கொள்வதற்காகவே உணவுப் பொருள்கள் அனுப்பப்படுவதாக அரசு அவசர அவசரமாக அறிவிப்புகள் [illegible] தாக அவதானிகள் தெரிவித்தனர்.

யாழ் மாவட்ட அரச திணைக்கள

ஊழியரின் கொடுப்பனவுகள் மீளாய்வு செய்ய கோரிக்கை

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களை கடமை புரியும் ஊழியர்களின் போக்குவரத்து உட்பட மற்றும் கொடுப்பனவுகளை மீளாய்வு செய்ய வேண்டும்.

இப்படியான கோரிக்கை ஒன்றை யாழ் மாவட்ட அரச திணைக்கள கணக்காளர் சங்கம் விடுத்துள்ளது.

[illegible] அண்மையில் நடைபெற்ற போதே மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டதுடன் அதனை அரச அதிபர் மூலம் அரசுக்கு தெரியப்படுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது

கொப்பேகடுவ மரண விசாரணை:

ஆணையாளர்களை தெரிவு செய்வதில் இழுபறி

கொழும்பு பெப் 10

ஜெனரல் கொப்பேகடுவ மரணம் பற்றி விசாரணை நடத்தவுள்ள 'கொமன்வெல்த்' விசாரணை ஆணைக்குழுவில் இடம்பெறக்கூடிய உறுப்பினர்களின் பெயர்களை அந்த அமைப்பு இலங்கை அரசுக்கு கடந்த வாரம் அனுப்பி வைத்தது.

ஆனால் அரசு எதிர்பார்த்த தகைமைகளைக் கொண்டவர்களாக, 'கொமன்வெல்த்' அமைப்பினால் சிபார்சு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இருக்கவில்லை என்றும்—

அதனால் விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்படுவது தாமதமாகும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக அரசு 'கொமன்வெல்த்' அமைப்புடன் மீண்டும் தொடர்பு கொண்டுள்ளது.

ஜனாதிபதி இடம்பெயர்சேவை தீவுப் பகுதியிலும் நடக்கும்!

கொழும்பு, பெப். 10

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தீவுப் பகுதிகளில் வாழும் மக்களின் குறைகளைப் போக்குவதற்காக ஜனாதிபதி இடம்பெயர் சேவை ஊர்காவற்றுறையில் விரைவில் இடம்பெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

திரு. பிரேமதாஸா தம்மிடம் இதனைத் தெரிவித்தார் என்று ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கூறினார்

மட்டக்களப்பில் ஜூலை மாதம் நடைபெறும் ஜனாதிபதி இடம்பெயர் சேவையின் பின்னர் தீவுப்பகுதிக்கான இடம்பெயர் சேவை இடம்பெறுவதற்கு திரு. பிரேமதாஸா விருப்பம் தெரிவித்துள்ளாராம். (உ-எ)

இலங்கைக்கு ரூ. 161 கோடி உலக வங்கி ஜூனில் வழங்கும்

உலகவங்கி 161 கோடி ரூபாவை இலங்கைக்கு எதிர்வரும் ஜூன் மாதத்தில் வழங்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

இக்கடன் வழங்கப்படுவதற்கான வழிகாட்டுதல்கள் குறித்து உலகவங்கி இலங்கை அரசுடன் இணக்கம் கண்டுள்ளது என்றும் —

இறுதி ஏற்பாடுகளை மேற்கொள்ள திருமதி. ஓர்ஸலியா கஸைசோ பௌலஸ் தலைமையில் 8 அல்லது 9 உறுப்பினர் கொண்ட உலகவங்கித் தூதுக்குழு அடுத்தவாரம் கொழும்பு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-எ)

தந்தை தாயில்லா வசனம் எழுதும் நிலை மாறவேண்டும்

கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்து

மானிப்பாய், பெப்.10

தந்தை தாயின்றிப் பிறந்த பிள்ளைகள் போல், எழுவாய் பயனிலை அற்ற வசனங்கள் எழுதுவோரை நாம் இன்றும் சந்திக்கின்றோம் இந்த நிலை மாற நாம் கசடறக் கற்க வேண்டும்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பிரவேச பண்டிதர், பால பண்டிதர் வகுப்புகளை மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் யாழ் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விழாவிற்கு பண்டத்தரிப்புக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வே. மகேசவேல் தலைமை வகித்தார்.

தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு. வே இளங்குமரன் உட்பட பல பிரமுகர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். (அ-90)

அறுவடை செய்ய முடியாது விவசாயிகள் திண்டாட்டம்

விதைத்த நெல்லை அறுவடை செய்ய முடியாது வயல் சொந்தக்காரர்கள் திண்டாடுகின்றனர்.

சுழிபுரம் பகுதியில் — பறாளை வடக்கு, மாதகல் மேற்குப் பக்கமாக உள்ள வயல்களில் விதைத்தவர்களுக்கு இந்தச் சதி ஏற்பட்டுள்ளது

மாதகலில் நிலைகொண்டுள்ள படையினர் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருவதே இதற்குக் காரணமாகும்.

கடந்த சில தினங்களாக வயலுக்குச் சென்று சொற்ப நேரம் வேலை செய்வதும், இடையில் கைவிட்டுவிட்டு ஓடி வருவதுமாகக் காலம் கழிகிறது என வயல் சொந்தக்காரர்கள் கவலையுடன் தெரிவித்தனர். (ஒ-28)

சாவகச்சேரி இந்துவுக்கு தேசிய கல்லூரி அந்தஸ்து

கொழும்பு, பெப் 10

அனைத்துப் பிரதேச செயலக பிரிவுகளின் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தேசிய பாடசாலையைப் பிரகடனம் செய்ய கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது

ஜனாதிபதி பிரேமதாஸா இதற்கான பணிப்புரையை விடுத்துள்ளார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

ஜனாதிபதியால் தேசிய அந்தஸ்து வழங்கப்பட்டுள்ள எட்டுப் பாடசாலைகளில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியும் ஒன்று என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது (உ-எ)

சு. கவிற்குள் எடுக்கப்பட்ட சமரச முயற்சி தோல்வி!

கொழும்பு, பெப் 10

சுதந்திரக் கட்சியில் நிலவும் உட்கட்சி மோதல்களை முடிவுக்குக் கொண்டு வர எடுக்கப்பட்ட பிந்திய முயற்சியும் தோல்வி கண்டுவிட்டதாகக் கூறப்படுகின்றது

அனுராவைக் கட்சியின் தலைவராக்குவதன் மூலம் சமரசத்தை ஏற்படுத்த எடுக்கப்பட்ட இம்முயற்சிக்கு முன்னர் ஆதரவளித்த சிறிமா பின்னர் பின்வாங்கிவிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது

வீட்டினைச் சுற்றி தோட்டங்கள் தழைக்க
நாட்டினில் எங்கும் பசுமையே செழிக்கும்

மரண அறிவித்தல்கள்

சுந்தரம் இராசரெத்தினம்

(முன்னாள் இ. போ. ச. சாரதி)

2111, கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது ஒட்டுமடத்தை வதிவிடமாகக் கொண்டவருமான சுந்தரம் இராசரெத்தினம் 06 - 02 - 1993 சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் இராசேஸ்வரியின் அன்புக் கணவரும், [illegible] திருமதி தி. தவதேவி, இரவீந்திரன் (டென்மார்க்), [illegible] திருமதி வி. சாலினி, விமல [illegible] ஜெயேந்திரன், திருமதி [illegible] (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநாவுக்கரசு, [illegible] ஆகியோரின் மாமனாரும், ஜெயந்தி, சுஜேந்தி, வளர்மதி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (11-02-1993) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
மனைவி, பிள்ளைகள்.

673, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம். 5789)

திருமதி தங்கரத்தினம் அரியராசா

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது நல்லூரில் வசித்தவருமாகிய திருமதி தங்கரத்தினம் அரியராசா [illegible].

இவர் காலஞ்சென்ற அரியராசாவின் (முன்னாள் தபால் அதிபர் - சிவதொண்டன் நிலைய கௌரவ செயலாளர்) அருமை மனைவியும், இராசமலர், அன்ரனிஸ் ராசா, பாலசுப்பிரமணியம், செல்வராணி, ஞானேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியசிங்கம், கோசலை, மகாதேவி, சிவசுப்பிரமணியம், சின்னத்தம்பி ஆகியோரின் அருமை மாமியாரும், காலஞ்சென்ற [illegible], இராஜரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், [illegible] ஸ்ரீ யாகேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தா, ஸ்ரீஞான [illegible], ஸ்ரீ [illegible] கலைவாணி, பவான், ரகு, [illegible], பாலகுமார், [illegible], குமரன், கௌரி, சாந்தி, ராஜ்ரா, [illegible], ஞானக்குமார், பாலக்குமார், ரகு, சிவக்குமார் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (10-2-93) புதன்கிழமை [illegible] மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
திருமதி இ. இராசமலர்
(மகள்)

122, செம்மணி வீதி,
நல்லூர்.
(24367)

சண்முகம் தம்பித்துரை

(Retd O. A)

தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், [illegible] கொண்டாவில் வசித்தவருமாகிய திரு. சண்முகம் தம்பித்துரை (பொன்னுத்துரை) நேற்றுக் காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், தனபாலசிங்கம் (D. S., பெற்றோலியக் கூட்டுத் தாபனம், மட்டக்களப்பு), பராராஜசிங்கம் (தபால் அதிபர் வவுனியா), மகேஸ்வரி, இந்திராதேவி (ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி), குமாரசிங்கம் (சுகாதார அமைச்சு, ஓமான்), நவரட்ணசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தாமரைச்செல்வி, றோகினி (யாழ் பல்கலைக் கழகம்), இரத்தினவடிவேல் (ஓய்வு பெற்ற நில அளவையாளர், சலாக்கா, கொழும்பு) அரியரத்தினம் (ஓய்வுபெற்ற திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்), கனகா (சுகாதார அமைச்சு, ஓமான்), ஓட்றி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தயாளினி, ராஜ்குமார், சேதீஸ்வரன், இந்துமதி, பாமதி, சிவானந்தன், கீதாஞ்சலி (யாழ் பல்கலைக் கழகம்), வானதி, கோபிகா, பார்த்திபன், பிருந்தா, லாவண்யா, பிரதீப், நிரேஷ் ஆகியோரின் பேரனாரும், ஜனார்த்தனன், ஜெயந்தன் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10 - 02 - 93 இன்று முற்பகல் 11 மணியளவில் கொண்டாவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தாவடி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. அரியரத்தினம்
(மருமகன்)

K. K. S. வீதி,
கொண்டாவில் மேற்கு,
(2[illegible]63)

நவரத்தினம் சுகிர்தாம்பிகை

சண்டிலிப்பாயைச் சேர்ந்தவரும் தற்போது சரசாலையை வதிவிடமாக கொண்டவருமான நவரத்தினம் சுகிர்தாம்பிகை காலமாகிவிட்டார்.

இவர் [illegible] இரட்ணஜோதி, ஸ்ரீதரன், கங்காதரன், சந்திரமோகன், கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நித்தியானந்தவதி, தருலேஸ்வரி, காலஞ்சென்ற தியாகேஸ்வரி, தேவயோகராணி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று சரசாலை தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும்.

தகவல்
ந. ஸ்ரீதரன், D. P. M.
யாழ் போதனா வைத்தியசாலை

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.
(24369)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10-02-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

வாகன அணி தாமதத்தைத் தவிர்க்க

காங்கேசனுக்கு மிகவிரைவில் போதியளவு உணவு அனுப்புக!

அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 10

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் போதிய உணவுப் பொருள்கள் சேர்ந்த பின்னரே அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு வாகன அணியை ஆரம்பிக்க முடியும் என்று செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு தெரிவித்திருக்கிறது.

அதனால் போதிய உணவுப் பொருள்களை காங்கேசன்துறைக்கு அனுப்பி வைக்கவும்.

— இவ்வாறு அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு அவசர செய்தி ஒன்றை நேற்று அனுப்பி வைத்தார்.

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் இப்பொழுது உள்ள உணவுப் பொருள்களின் கையிருப்பு நிலை தமக்குத் தெரியாது என்றும் —

அதனையும் அறிவிக்குமாறும் அரச அதிபர் மேலும் கேட்டுள்ளார்.

காங்கேசன் உணவுக் களஞ்சியத்தில் இருந்து உணவுப் பொருள்களை வாகன அணி மூலம் எடுத்து வருவதற்கு படையினரும் விடுதலைப் புலிகளும் இணக்கம் தெரிவித்திருந்தனர்.

ஆனால் அங்கு போதிய உணவுப் பொருள்கள் கையிருப்பில் இல்லாததே வாகன அணியைத் தொடங்குவதற்கு முக்கிய தடையாக இருப்பதாகச் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு தெரிவித்திருப்பதாக அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார். (அ-3-162)

★ அரசியல் தஞ்சம் கோரும்

இலங்கையர்களுக்கு சுவிஸில் வழங்கப்பட்ட சலுகை வாபஸ்?

கொழும்பு, பெப். 10

அரசியல் தஞ்சம் கோரும் இலங்கையர்களுக்கு விசேட அந்தஸ்து வழங்கும் சலுகையை ரத்துச் செய்வது குறித்து சுவிட்சர்லாந்து அரசு பரிசீலித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சலுகையை அரசியல் தஞ்சம் கோருபவர்கள் பரவலாகத் துஷ்பிரயோகம் செய்து வருவதால்தான் இந்த நடவடிக்கையை மேற்கொள்வது பற்றி தமது அரசு பரிசீலித்து வருவதாக கொழும்பிலுள்ள சுவிஸ் தூதரக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விசேட அந்தஸ்து வழங்கும் சலுகை ரத்துச் செய்யப்பட்டால், அரசியல் புகலிடம் கோரும் இலங்கையரின் விண்ணப்பங்கள் ஏனைய நாடுகளைச் சேர்ந்தோரின் விண்ணப்பங்கள் தொடர்பாக கடைப்பிடிக்கப்படும் நடைமுறைப்படியே கவனிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

வடக்கு - கிழக்கு யுத்தம் காரணமாக இலங்கை அகதிகள் தற்காலிகமாக சுவிஸில் தங்கியிருப்பதற்கு தற்போது அனுமதி வழங்கப்படுகிறது.

சாதாரண அகதி அனுமதி நடைமுறை இனிமேல் அனுமதிக்கப்படுமானால், ஒவ்வொரு விண்ணப்பமும் அரசு அகதிகள் அலுவலகத்தால் தனித்தனியாக பரிசீலிக்கப்படும். விண்ணப்பம் பற்றி முடிவு எடுக்கப்பட்டால் அதனை எதிர்த்து, விசேட மன்று ஒன்றுக்கு ஒரு முறை மட்டுமே முறையிட அனுமதிக்கப்படும் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

சொந்த நாட்டில் துன்புறுத்தலுக்குள்ளாகிறவர்களுக்கு மட்டுமே சுவிஸில் அரசியல் புகலிடம் கிடைக்கும் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கும் சைகையாகவே இந்த மாற்றத்தைக் கொண்டுவர சுவிஸ் அரசு எண்ணியிருப்பதாகவும் அவர் கூறினார்.

இலங்கை அகதிகளை அனுமதிக்கும் தற்போதைய நடைமுறை மாற்றப்படாவிட்டால், அது தொழில் தேடி மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வது போன்று சுவிஸுக்கும் எவரும் வந்துபோக இடமளிப்பதாக அமையும் என்றும் அவர் கூறினார்.

எனினும் —

இலங்கையில், போர் முனையில் இருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக வந்தவர்கள் எவரையும் சுவிஸ் அரசு திருப்பி அனுப்பாது என்றும் அவர் குறிப்பிட்டார். (உ-எ)

தமிழீழ காவல்துறை

பதவி வெற்றிடங்கள்

உப பரிசோதகர்/காவலர் தரங்கள்

கல்வித்தகைமைகள் :
8ம் வகுப்பு தொடக்கம்
க. பொ. த (உயர்தரம்) வரை

உயரம் : 5' 6"

வயது : 18 தொடக்கம் 30 வரை

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 20 - 02 - 93 ஆம் திகதி வரை பழையபூங்காவிலுள்ள காவல்துறை அலுவலகத்திற்கு நேரடியாகச் சமுகம் தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும், நேர்முகத் தேர்வின் இறுதித் தேர்விற்கு அழைக்கப்படாதவர்களும் உடனடியாகச் சமுகம் தரவும்.

பா. நடேசன்
பொறுப்பாளர்,
காவல்துறை,
தமிழீழம்.

(4511

ருஷ்டியின் கொடும்பாவி எரிப்பு

'சாத்தானின் கவிதைகள்' நூலை எழுதிய சல்மான் ருஷ்டியின் கொடும்பாவியை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொண்டர்கள் கொழும்பில் கடந்த ஞாயிறு காலை எரித்தனர்.

அதற்கு முன்னர் முஸ்லிம் ஆண்களும் பெண்களுமாக ஸ்ரீசங்கராஜ மாவத்தையில் இருந்து ருஷ்டிக்கு எதிராகக் கோஷங்கள் எழுப்பியபடி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வருடாந்த மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த சுகததாச விளையாட்டரங்குக்குச் சென்றனர். (த-எ)

புலிகள் தாக்கு புளொட் உறுப்பினர் பலி

கொழும்பு, பெப். 0

கடந்த வெள்ளிக்கிழமை மன்னாரில் நடந்த மோதல் ஒன்றில் விடுதலைப் புலிகள், புளொட் உறுப்பினர் ஒருவரைக் கொன்றனர்.

'புளொட்' அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் இத்தகவலைத் தெரிவித்தார்.

வன்னிப் பிராந்தியத்தில் ஆயுதப் படையினருடன் சேர்ந்து சென்றிகளில் புளொட் குழுவினரும் பணிபுரிந்து வருகின்றனர் என்றும் —

இத்தகைய பணிகளில் ஈடுபட்டிருந்த சமயம் தமது குழுவைச் சேர்ந்த பலர் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (உ-எ)

மரண அறிவித்தல்

றேமுந்துப்பிள்ளை பெர்ணடேற்றம்மா

சில்லாலையை பிறப்பிடமாக கொண்டவரும் மானிப்பாய் உடுவில் றோட் 2 ஆம் ஒழுங்கையை தற்போது வதிவிடமாக கொண்டவருமான றேமுந்துப்பிள்ளை பெர்ணடேற்றம்மா 9 02 93 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை றேமுந்துப்பிள்ளையின் அன்பு மனைவியும், பிலோமினா ஞானசேகரனின் அன்புத் தாயாரும், காசிநாதன் ஞானசேகரனின் அன்பு மாமியாரும், மரியம்மா, காலஞ்சென்ற கிறிஸ்தோப்பர், அருளானந்தம் மரியநாயகம், அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் அன்பு சகோதரியும், வதனி, கிளெனி, கிரிதரன், ஹரிகரன் ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு அவரின் இல்லத்தில் இன்று (10-2-93) பி. ப 3 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சில்லாலை சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
காசிநாதன்
உடுவில் றோட்,
மானிப்பாய்
(24378)

மரண அறிவித்தல்கள்

கந்தையா சண்முகநாதன்

காரம்பன் கிழக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், வேலணை மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான கந்தையா சண்முகநாதன் கொழும்பில் (07 - 02 - 93) காலமானார்.

அன்னார் தவச்செல்வியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தையா கமலத்தின் அன்பு மகனும், காலி வர்த்தகர் ஐயாத்துரை மங்கையர்க்கரசி தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி ஆனந்தஸ்வரி - தர்மலிங்கம், திருமதி பதுமநிதி இராசையா, திரு. சிதம்பரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி பங்கயச்செல்வி - சச்சிதானந்தம், (ஜெர்மன்) சிவபாலன் (ஜெர்மன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 09 02 93 அன்று கொழும்பில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பதுமநிதி இராசையா
(சகோதரி)

184, பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம்.
(24371)

மாணிக்கம் சின்னத்துரை

பாரதி வீதி, பத்தைமேனி அச்சுவேலியைச் சேர்ந்த மாணிக்கம் சின்னத்துரை நேற்று காலமானார். இவர் திருமதி செல்லம்மாவின் அன்புக் கணவரும், திருமதி சுகுணாதேவி (ஆசிரியை அளவெட்டி அருணோதயக் கல்லூரி), திரு. அபிமன்னன், திருமதி ஸ்ரீரஞ்சினிதேவி, திருமதி ஸ்ரீசிகலாதேவி (பிரான்ஸ்), ஸ்ரீகிரிதரன் (பிரான்ஸ்), ஸ்ரீகுமார் (ஜேர்மன்), ஸ்ரீசுரேந்திரன், ஸ்ரீ முரளிதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும், திரு மகேஸ்வரன் (சிறைச்சாலைப் பாதுகாவலர்), திரு. சி. பாலகுருநாதன் (பாதுகாப்பு அலுவலர் சீமெந்துக் கூட்டுத்தாபனம்), திருமதி இரஞ்சிதமலர் (அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பழை), வரதராசா (பிரான்ஸ்), திருமதி விமலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், சபேசன், மயூரன், நர்மதா, தாட்சாயினி, சக்திநாதன், சத்திகா, மகாசக்தி, பிரதீபா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஆக்லேன்,
உடுவில்.
(24366)

ஆ. க. சின்னத்தம்பு

[முன்னாள் உரிமையாளர், இம்பீரியல் அச்சகம் ஹற்றன், கிளிநொச்சி]

மாவிட்டபுரம் ஸ்ரேசனடியைச் சேர்ந்த ஆ. க. சின்னத்தம்பு 09-02-93 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஆ. க. சுப்பையா, காலஞ்சென்ற கற்பகவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுந்தரலிங்கம் (கனடா), இரத்தினேஸ்வரி, இரத்தினகுமாரி, இரத்தினராணி, இரத்தினஜோதி ஆகியோரின் அன்புத்தந்தையாரும், விஜயலக்ஷ்மி (கனடா), பாலலிங்கம் (திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் யாழ். செயலகம்), சோமேஸ்வரன் (யூனியன் காபைட்ஸ் கொழும்பு), சத்தவனம் (ஈ. சி. ஜி தொழில்நுட்ப உத்தியோகத்தர் யாழ் போதனா வைத்தியசாலை), ஜெயகுகன் (ஈஸ்வரன் பிரதர்ஸ், கொழும்பு) ஆகியோரின் அன்புமாமனாரும், கிருஷாந்தன் (கனடா), ஜயத்ரி, ஜயத்ரதன், கார்த்திகேயா, காங்கேயா, சுஜரூபன், செந்தூரன், தர்ஷிகன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற தவராஜா (புகையிரத நிலைய அதிபர்), தர்மராஜா (சித்தங்கேணி, இம்பீரியல் அச்சகம் ஹற்றன்), தியாகராஜா (இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம், புத்தளம்), திருமதி இராஜலக்ஷ்மி அமரசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் ஆனைக்கோட்டை ''கார்த்திகை'' இல்லத்தில் 10-02-93 புதன் காலை 9-00 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக ஆனைக்கோட்டை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
மு. பாலலிங்கம்
(மருமகன்)

''கார்த்திகை''
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.
[5814]

செல்லையா பொன்னுத்துரை

(சாத்திரியார்)

(பிரபல காண்டம் வாசிப்பவர்)

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த செல்லையா பொன்னுத்துரை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அரசரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சங்கரசிவம், சண்முகலிங்கம், பரமலிங்கம் (டாக்டர்), விக்னேஸ்வரன், சீதாலெட்சுமி, கமலாம்பிகை, மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற நல்லையா, செல்வராஜா, சபாநாயகம் (டாக்டர்), நீலாதாட்சியம்மா, சிவகுருச்செல்வி, வசந்தாதேவி, நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

பூதவுடல் அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக இன்று மாலை 4 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் பொ. பரமலிங்கம் J.P
(மகன்)

நீதிராஜா வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(24370)